**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG10 – நிலை I – (Grade 1)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)
**ஜனவரி–பிப்ரவரி 2021**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10x1 = 10)**

1. கடவுள் வாழ்த்து என்பதன் பொருள் யாது?
2. ஒரு நாடு வளர எது வேண்டும்?
3. முப்பால் என அழைக்கப் பெறுவது எது?
4. சைவத் திருமுறைகள் மொத்தம் எத்தனை?
5. திருமால் உலகத்தை எத்தனை அடிகளால் அளந்தார்?
6. கைலாசநாதர் கோயிலைக் கட்டியவர் யார்?
7. நூறாயிரம் என்பது எவ்வளவு?
8. உயிர்குறில் எழுத்து எத்தனை மாத்திரை அளவு உடையது?
9. திணை எத்தனை வகைப்படும்?
10. வட்டம், வண்ணம், குணம் முதலியன எவ்வகைப் பெயர்கள்?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. காஞ்சிபுரத்திற்கு உள்ள இரண்டு சிறப்புகள் யாவை?
2. மாத்திரை என்றால் என்ன?
3. சோழன் கிள்ளியின் யானை சினம் கொண்டு எங்கே கால் வைத்தது?
4. வீரமாமுனிவர் இயற்றிய நூல்களைக் குறிப்பிடுக.
5. அப்பர் பாடிய திருமுறைகள் யாவை?
6. கல்வி எப்படிப்பட்ட மருந்து?
7. சிறந்த நட்பு எது என்கிறார் திருவள்ளுவர்?
8. "வாழ்க, வாழ்க" என்று நாமக்கல் கவிஞர் எவற்றை வாழ்த்துகிறார்?
9. வள்ளலார் தம்மைப் பற்றி என்ன கூறுகிறார்?
10. மறுமலர்ச்சிப் பாடல்களின் தன்மை என்ன?

11. எப்பண்புகளில் மாற்றம் இருக்கக் கூடாது?
12. வாழைக்குலை என்றால் என்ன?
13. 'நஞ்சு' தேர்வை முழுமையாக எழுதினானா?
14. தமிழ் செம்மொழி என்பதற்குப் பெற்றுள்ள ஒரு சிறப்புப் பண்புகள் யாவை?
15. செயபாலன் எவற்றைக் கவிதையில் வடித்தார்?

## பகுதி – இ

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. கிள்ளியின் பட்டத்து யானையின் போர் சிறப்பினை எழுதுக.
2. புதுக்கவிதை என்றால் என்ன? உம் சொந்த நடையில் மூன்று வரியில் ஒரு புதுக்கவிதை எழுதுக.
3. படிப்பது எதற்காக என பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் கூறும் கவிதை வரிகளை விளக்குக.
4. இலங்கைக்குச் சென்ற குரங்கு வீரர்களுக்கு, வால்மீகி எவ்வாறு வழி கூறினார்?
5. பாரதியார் – ஆசிரியர் குறிப்பு தருக.
6. பெயர்ச்சொற்களின் வகைகளைக் கூறி? உதாரணம் தருக.
7. வாழைமரத்தின் அனைத்து பாகங்களும் எப்படி பயன்படுகின்றன என்பதை விளக்குக.
8. மெய் எழுத்துகளின் வகைகளை எழுதுக.

## பகுதி – ஈ

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**

Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. தமிழ் மொழியின் உயர்வுக்கு அதன் பழமையும் ஒரு காரணம் என்பதைச் சான்று தந்து விளக்குக.
2. புணர்ச்சியின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. வீட்டிற்கு வந்த உறவினர்களைக் குடும்பத் தலைவி எவ்வாறெல்லாம் உபசரித்தாள்?

## பகுதி – உ

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**

**Write an essay in three pages to any one of the questions. (1x15=15)**

1. இராமன் விளைவு குறித்துக் கட்டுரை ஒன்று வரைக.
2. 'நட்பு' என்னும் திருக்குறள் அதிகாரத் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

*******